# 68

# தவறவிடப்பட்ட வாய்ப்புகள்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #28*

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்.

A. வெள்ளிக்கிழமை பிற்பகல்: பெத்தானியாவுக்கு வருதல் (யோவா. 11:55-12:1).[1]

B. சனிக்கிழமை மாலை: பெத்தானியாவில் ஒரு விருந்து (மத். 26:6-13; மாற். 14:3-9; யோவா. 12:2-11).

C. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்: எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் (மத். 21:1-11; மாற். 11:1-11; லூக். 19:29-44; யோவா. 12:12-19).

D. திங்கட்கிழமை: அத்திமரத்தை சபித்தல், தேவாலயத்தைச் சுத்திகரித்தல், பார்வையற்றவரையும் கால் ஊனமானவரையும் குணமாக்குதல் (மத். 21:12-19; மாற். 11:12-19; லூக். 19:45-48; 21:37, 38).

E. செவ்வாய்க்கிழமை: "கேள்விகளின் பெரியநாள்."

1. அறிமுகம்: காய்ந்துபோன அத்திமரம் (மத். 21:20-22; மாற். 11:20-26).

## அறிமுகம்

எனது பிரசங்கித்தலில் முக்கிய கருத்தை எடுத்துரைப்பதற்கு முன்பு, எனது தலைப்பைப் பற்றிய பல வகையான விஷயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் என்பது அவ்வப்போது எனக்கு அவசியமாக இருக்கிறது. இவற்றின் மூலம் எனது வழியைத் தெளிவாக்கிய பின்பு, சில வேளைகளில் நான் சற்றே நிதானித்து நின்று, "அதுவே எனது அறிமுகமாக உள்ளது. இப்போது பிரசங்கத்திற்குச் செல்லுவோம்" என்று கூறுவதுண்டு. இவ்வார்த்தைகள் [எனது உரையைக் கேட்பவர்கள் தங்களின்] கண்களை அகலத் திறக்கக் காரணமாகி, கலவரம் தோன்றுவதாகக் காணப்படும் - ஏனென்றால் பிரசங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பெரும்பான்மை யான பகுதி ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருக்கும். கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நமது படிப்பு இதைப் போன்றதாகவே உள்ளது: நமது முந்திய பாடம் "அறிமுகத்தை" முடித்திருந்தது, இப்போது நாம், "பிரதானக் கருத்துக்களுக்கு" தயாராக இருக்கின்றோம்.

சுவிசேஷ விவரங்களில் உள்ள ஆரம்ப நிலைப் பாடக்கருத்துக்களில், இன்றியமையாத சத்தியங்கள் போதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றினால் உச்சக் காட்சியை அடைந்த, இயேசுவின் தனிப்பட்ட ஊழியத்தினுடைய கடைசி ஒரு சில நாட்களுக்கென்று நம்மை ஆயத்தப்படுத்துதல் என்பதே அந்தப் பாடக் கருத்துக்களின் நோக்கமாக இருந்தது. ரிச்சார்டு ரோஜர்ஸ் அவர்கள் இந்த விசேஷித்த காலகட்டத்தை, "உலகை மாற்றிய எட்டு நாட்கள்" என்று அழைத்தார்.[2] அந்த எட்டு நாட்களில் நடந்தவற்றைப் பற்றிக் கூறுவதற்கு, சுவிசேஷ விவரங்களில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதியானது செலவிடப் பட்டுள்ளது.[3] குறிப்பாக யோவான், கிறிஸ்துவின் வாழ்வின் முடிவுப் பகுதி யின்மீது கவனம் செலுத்தினார். யோவான் சுவிசேஷத்தின் இருபத்தியோரு அத்தியாயங்களில் ஏறக்குறையப் பாதிப் பகுதியானது பெத்தானியாவுக்கு இயேசு வந்து சேர்ந்தபோது நடந்தவற்றைக் கூறுவதற்கு ஒப்புக்கொடுக்கப் பட்டுள்ளது.

பூமியின்மீது கர்த்தரின் கடைசி நாட்கள் "எருசலேமில் கிறிஸ்துவின் ஊழியம்" என்பதாக நினைக்கப்படலாம். (நாம் அறிந்துள்ள வரையில்) இயேசு இப்போது செய்ததுபோல், இதற்கு முன் ஒருக்காலும் அந்த நகரத்தில் தமது அதிகமான காலத்தையும் சக்தியையும் செலவிட்டதே இல்லை. இது எருசலேமையும் அதன் தலைவர்களையும் - அவர்கள் மூலமாக நாட்டையும் - இஸ்ரவேலுக்கான தேவனுடைய திட்டத்திற்குப் பின் னோக்கித் திருப்புவதற்கு அவர் செய்த கடைசி திட முயற்சியாக இருந்தது.[4] துரதிர்ஷ்டவசமாக, இது தவறவிடப்பட்ட வாய்ப்புக்களின் காலமாக இருந்தது.

## நம்புவதற்கான ஒரு வாய்ப்பு
## (மத். 26:6-13; மாற். 14:3-9; யோவா. 11:55-12:11)

''உலகை மாற்றிய எட்டு நாட்களுக்கு'' யோவான், முன்னுரை அளித்தார். முதலில் அவர், ''யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்தது" என்று சுட்டிக்காண்பித்தார் (யோவா. 11:55அ). பஸ்கா பண்டிகையானது, தேவன் எகிப்தில், ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களில் தடவப்பட்டிருந்த இஸ்ரவேல் ஜனங்களின் வீடுகளைக் ''கடந்து சென்றதை'' நினைவுகூர்ந்தது (யாத். 12:1-28). பஸ்கா பண்டிகையின்போது, இஸ்ரவேல் ஜனங்கள் பயணத்தைத் தொடங்கியபோது செய்ததுபோன்றே, பஸ்கா [Paschal][5] ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டது. ''குற்றமில்லாத, மாசற்ற'' ''தேவ ஆட்டுக் குட்டி"யானவரின் (1 பேது. 1:19; யோவா. 1:29) பலிக்கு இதை விடப் பொருத்தமான காலம் வேறெதுவும் இருந்ததில்லை.

பின்பு யோவான், ''அநேகர் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள்" என்று குறிப் பிட்டார் (யோவா. 11:55ஆ). பஸ்கா பண்டிகை உட்பட (2 நாளா. 30:13-20, விசேஷமாக வசனம் 17ஐக் காணவும்), ஆவிக்குரிய நிகழ்ச்சிகளுக்கு

*முன்னதாக (யாத். 19:10, 11ஐக் காணவும்) சடங்காச்சாரப்படி சுத்திகரித்துக் கொள்ளுதல் என்பது அவசியமாக இருந்தது. சடங்காச்சார ரீதியாகச் சுத்தமற்றவர்கள் பஸ்கா உணவை உண்பதற்கு அனுமதிக்கப்படவில்லை (யோவா. 18:28ஐக் காணவும்). பண்டிகைக்குத் திரளான கூட்டம் எருசலேமில் வந்து சேரும் என்பதால்,[6] சுத்திகரிப்புச் சடங்குகளுக்குப் பலநாட்களாகி விடும். எனவே முன்னதாக வரக்கூடிய பயணிகள் சற்று முன்னதாகவே வந்து, தாங்கள் பஸ்கா விருந்தில் பங்கேற்பதை உறுதி செய்து கொண்டார்கள். இந்தப் பாடத்திலும் அதைத் தொடர்வதிலும் குறிப்பிடப் பட்டுள்ள, பின்பற்றிச் சென்ற "திரளான கூட்டத்தார்" என்பது உண்மையில் பண்டிகை நடைபெறுவதற்கு ஒரு வாரம் அல்லது சற்றே அதிகமான காலம் முன்னதாகவே வந்து சேர்ந்திருந்த திருப்பயணிகளைக் குறித்தது.*

*யோவான் சுவிசேஷத்தின்படி, முன்னதாக வந்திருந்த பயணிகள், "இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்தில் நிற்கையில், ஒருவரை யொருவர் நோக்கி: 'உங்களுக்கெப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ' என்று பேசிக்கொண்டார்கள்" (யோவா. 11:56). பல வாரங்களுக்கு முன்னதாக லாசருவை உயிருடன் எழுப்பி யிருந்தது, அதைத் தொடர்ந்து அதிகாரிகள் கிறிஸ்துவைக் கொலை செய்யத் தீர்மானித்தது (யோவா. 11:1-53) ஆகியவை, உணர்வெழுச்சியைக் காய்ச்சல் நிலைக்கு எழுப்பியிருந்தது (யோவா. 12:9, 17-19ஐக் காணவும்). "பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி யோசித்து, அவர் இருக்கிற இடத்தை எவனாவது அறிந்திருந்தால், அதை அறிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார்கள்" (யோவா. 11:57).[7] எருசலேமிலும் அதைச் சுற்றிலுமிருந்த நகரங்களிலும் கிராமங்களிலும் பொது ஜனங்களுக்கு அறிவிப்புத்தாள்கள் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.[8] மக்கள் இயேசுவைப் பார்க்க ஏங்கினார்கள், ஆனால் அபாயத்தின் வெளிச்சத்தில், அவர் பண்டிகைக்கு வரத் துணியமாட்டார் என்று அவர்கள் நினைத்தனர். இவ்விதமாக, இயேசு எரிகோவிலிருந்து கடைசி மைல்களைக் கடந்து வந்துகொண்டிருந்தபோது அவருக்குக் காத்திருந்த வெடித்தல் போன்ற சூழ்நிலையை வரைக்குறிப்பிட்டார்.[9]*

### *வழங்கப்பட்ட வாய்ப்புகள் (மத். 26:6-13; மாற். 14:3-9; யோவா. 12:1-9, 11)*

*யோவான் 12:1ன்படி, "பஸ்கா, பண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே" இயேசு பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்தார்.[10] எருசலேமில் இருந்து "ஏறக்குறைய இரண்டு மைல்" தொலைவில் இருந்த பெத்தானியா என்ற ஊரில்தான் (யோவா. 11:18),[11] மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோர் வாழ்ந்தனர் (யோவா. 11:1). அங்கு கிறிஸ்து சற்றுக் காலத்திற்கு முன்புதான் லாசருவை மரித்தோரில் இருந்து உயிரோடு எழுப்பியிருந்தார் (யோவா. 11:2-46; 12:1). அவர் அநேகமாக வெள்ளிக்கிழமையன்று சூரியன் மறைவதற்குச் சற்று முன்னதாக பெத்தானியா ஊருக்கு வந்து சேர்ந்திருக்கலாம்.[12]*

*இயேசு அந்த ஓய்வுநாளை, தமது நண்பர்களைக் காண்பதிலும்,*

*ஒருவேளை உள்ளூர் ஜெப ஆலய ஆராதனைகளில் கலந்துகொள்ளுவதிலும் அமைதியாகச் செலவிட்டிருப்பார். பின்பு, சனிக்கிழமை மாலையில், ஓய்வுநாள் முடிந்து, யூதர்களின் வாரத்தின் முதல் நாள் தொடங்கிய பின்பு, "அங்கே [அவர்கள்[13]] அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்" (யோவா. 12:2அ). இந்த இரவு உணவானது "குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில்" நடைபெற்றது (மத். 26:6; மாற். 14:3), இவர் அநேகமாக முன்பு ஒரு தொழுநோயாளியாக இருந்து, கர்த்தரால் குணமாக்கப்பட்டிருக்க வேண்டும்.[14] அந்த விருந்து கிறிஸ்துவையும் லாசருவையும் கனப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது (யோவா. 12:2ஆ, 9).*

*உணவின்போது, மரியாள் இயேசுவை அபிஷேகம் செய்த நெஞ்சைத் தொடும் வரலாறு நடைபெற்றதென்று நாம் அறிகின்றோம்.[15] அங்கிருந்த சிலர் இந்தச் செயலுக்காக மரியாளை விமர்சித்தனர்,[16] ஆனால் இயேசு அவளுக்கு மிக உயர்வான புகழ்ச்சியைக் கொடுத்தார்:*

> *அவளை விட்டுவிடுங்கள்; ஏன் அவளைத் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டா கும் போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம், நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன். இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யா கவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மாற். 14:6-9; மத். 26:10-13ஐக் காணவும்).[17]*

*இயேசுவும் லாசருவும் விருந்தில் இருந்த செய்தி பரவிற்று, மற்றும் அவ்விருவரையும் காண ஆவலாயிருந்த கூட்டத்தினர் எருசலேமிலிருந்து வந்தனர் (யோவா. 12:9). அது கிறிஸ்துவின் வல்லமைக்கு உயிருள்ள சாட்சி ஒன்றைக் காண்பதற்கான வாய்ப்பாக இருந்தது. இதன் விளைவாக, "... யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (யோவா. 12:10).*

***நிராகரிக்கப்பட்ட வாய்ப்புகள் (யோவா. 12:10, 11)***

*யூதத் தலைவர்களும்கூட தொடப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக, பிரபலத் தன்மையின் ஜுவாலைகளை விசிறிவிட்ட அதே விஷயமானது வெறுப்புணர்வின் அக்கினிக்கும் எரிபொருளை வழங்கிற்று. சனதெரீன் சங்கத்தாரின் பித்தம்கொண்ட பொறாமையானது அவர்களின் அலுவலக ரீதியான அடுத்த முடிவில் தெளிவாயிற்று: "லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தபடியால், பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள்" (யோவா. 12:10, 11). லாசரு தான் கல்லறையில் கிடந்திருக்க வேண்டிய வேளையில் நடந்து சுற்றிக் கொண்டிருந்ததைத் தவிரத் தவறு வேறெதுவும் செய்திருந்ததில்லை, ஆனால் இவரை அவர்கள் ஒரு அச்சுறுத்தலாகக் கண்டனர் - எனவே இவர் மரிக்க வேண்டியிருந்தது.[18]*

## *த்தலுக்கான வாய்ப்பு (மத். 21:1-11; மாற். 11:1-11; லூக். 19:29-44; யோவா. 12:12-19)*

*"மறு நாளிலே" (யோவா. 12:12அ),[19] அநேகமாக மத்தியானத்தின் பிற்பகுதியில் (மாற். 11:11ஐக் காணவும்), இயேசு பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்கிருந்த இரண்டு மைல்கள் தொலைவைப் பயணம் செய்து கடந்து வந்தார். நகரத்தினுள் அவர் பிரமிப்பூட்டும் வகையில் பிரவேசித்த நிகழ்ச்சியானது பொதுவாக, "வெற்றிப் பிரவேசம்" என்று அழைக்கப் படுகிறது. இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கும் வகையில், நான்கு சுவிசேஷங்களும் இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகின்றன.*

### *வழங்கப்பட்ட வாய்ப்பு (மத். 21:1-11; மாற். 11:1-11; லூக். 19:29-38; யோவா. 12:12-18)*

*கட்டியெழுப்பப்பட்டிருந்த உணர்வெழுச்சியானது அந்நாளில் ஒரு உச்சகட்டத்தை அடைந்தது. இயேசு பெத்தானியா ஊரை விட்டுப் புறப்படுகையில் அவர் அநேகமாக, உற்சாகமிகுந்த ஒரு கும்பலினால் சூழப்பட்டு இருக்க வேண்டும் (மத். 21:9; மாற். 11:9ஐக் காணவும்). பெத்தானியாவுக்குச் சற்றே அப்பால், ஒலிவ மலையின்மீது, பெத்பகே என்ற ஊர் இருந்தது (மத். 21:1; மாற். 11:1; லூக். 19:29ஐயும் காணவும்).[20] அந்த ஊரில் ஒரு கழுதையையும் அதன் குட்டியையும் கண்டு, கொண்டு வரும்படியான அறிவுறுத்துதலுடன் கிறிஸ்து இரண்டு சீஷர்களை அனுப் பினார் (மத். 21:1-3).[21] அவர்கள் அந்த இரு விலங்குகளையும் ஆண்ட வரிடத்தில் கொண்டுவந்து, அவைகளின்மீது இருக்கைகளாகப் பயன் படுவதற்கென்று தங்கள் வஸ்திரங்களை அவற்றின்மீது பரப்பினர் (மத். 21:6, 7).*

*கிறிஸ்து தமது பயணத்திற்குக் கழுதைக் குட்டியைத் தேர்ந்து கொண்டார்.[22] நான் வளர்ந்த இடத்தில், குதிரைகளின்மீது சவாரி செய்தல் என்பது சாதாரண வழக்கமாக இருந்தது, ஆனால் ஒரு கழுதையின்மீது சவாரி செய்தல் என்பது மிகுந்த சங்கடத்திற்கு உரியதாக இருக்கும். யூதர்கள் மிருகங்களை மாறுபட்ட வகையில் கண்ணோக்கினர்; விசேஷித்த நிகழ்ச்சிகளில் அரச குமாரர்கள்கூடக் கழுதையின்மீது பவனி வந்தனர்.[23] குதிரை என்பது யுத்தத்தின் சின்னமாகக் கருதுப்பட்டது (யோபு 39:19-25ஐக் காணவும்), அதே வேளையில் கழுதை என்பது சமாதானத்தின் சின்னமாகக் கருதப்பட்டது. சமாதானப் பிரபு ஒரு கழுதையின்மீது ஏறி வந்தார் என்பது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தது (மத். 21:4, 5; யோவா. 12:14, 15).[24]*

*இயேசு கழுதைக் குட்டியின்மீது ஏறுகையில், திரளான கூட்டத்தில் இருந்தவர்கள் தங்கள் மேல் வஸ்திரங்களைச் சாலையின்மீது விரித்து மரக்கிளைகளையையும் சாலையில் பரப்பினார்கள் (மாற். 11:8).[25]*

*அவர்களின் ஆர்ப்பரிப்பானது மலையிலிருந்து மலைக்கு எதிரொலித்தது:*

*தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா![26]*
*கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர்*
*ஸ்தோத்திரிக்கப்பட்டவர் ... (மத். 21:9).*

*நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம்*
*ஆசீர்வதிக்கப்படுவதாக;*
*உன்னதத்திலே ஓசன்னா! (மாற். 11:10).*

*கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா*
*ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.*
*பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும்*
*உண்டாவதாக (லூக். 19:38).*

*அவர்கள் துதித்ததில் பெரும்பகுதியானது சங்கீதம் 118ல் இருந்து வந்தது,[27] இது திருப்பயணிகள் எருசலேமுக்குச் செல்லும் வழியில் அவர்களால் பாடப்பட்ட ஹல்லெல்[28] சங்கீதங்களில் ஒன்றாக இருந்தது. அவர்களின் வார்த்தைகள், மேசியாத்துவச் சொல்வழக்கினால் பொதியப் பட்டிருந்தன: "தாவீதின் குமாரன்," "தாவீதின் ... ராஜ்யம்," "ஆண்டவரின் நாமத்திலே வருகிற இராஜா." இரண்டாவது முறையாக, மனிதர்கள் இயேசுவை ஒரு ராஜாவாக முடிசூட்டுவிக்கத் தயாராக இருந்தனர் (யோவா. 6:15ஐக் காணவும்).*

*எருசலேம் நகரை நோக்கிக் கிறிஸ்து நெருங்கி வந்து கொண்டிருந்த செய்தி நகரத்தில் சென்று சேர்ந்தது. நகரிலிருந்து ஒரு கூட்டத்தார் அவரைச் சந்திப்பதற்காக வந்தனர் (யோவா. 12:12, 13, 17, 18), இவர்கள் குருத் தோலைகளைக்[29] கைகளில் வைத்துக்கொண்டு அசைத்தவர்களாய், "ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (யோவா. 12:12, 13) என்ற கருத்தைத் தேர்ந்து கொண்டனர்.*

***நிராகரிக்கப்பட்ட வாய்ப்பு (லூக். 19:39-44; யோவா. 12:19)***

*இதற்கு முன்பு இயேசு, தம்மை ஒரு ராஜாவாக முடிசூட்டுவிக்கும் கருத்தை ஊக்கம் குறையச் செய்திருந்தார் (யோவா. 6:15). ஊக்கமிகுந்த இந்த செயல்விளக்கத்தை அவர் ஏன் அனுமதித்தார்? தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காக அவர் இதைச் செய்தார் என்று வேதபாடப் பகுதி கூறுகிறது (மத். 21:4). ஒருவேளை, இது அவர் தம்மை மேசியாவாக ஒப்புக்கொள்ளும்படி எருசலேமை (விசேஷமாக அதன் அலுவலர்களை) வற்புறுத்துவதற்கான கடைசி முயற்சியின் ஒரு பாகமாக இருந்ததென்பது இன்னொரு காரணமாக இருக்கலாம்.*

*யூதத் தலைவர்களைப் பொறுத்தமட்டில், இது தவறவிடப்பட்ட இன்னொரு வாய்ப்பாக இருந்தது. இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் என்ற சாத்தியக்கூற்றைச் சிந்தித்துப்பார்க்கவும் மனவிருப்பம் இல்லாதிருந்த அவர்களின் பதில்செயல் இரு மடங்கானதாக இருந்தது. முதலாவது,*

அவர்கள் முறையிட்டனர்:[30] “போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும்” (லூக். 19:39). சத்தம் மிகுந்த அந்தப் பேரணி, எப்போதும் கவனமிகுந்தவர்களாய் இருந்த ரோம இராணுவத்திற்கு எரிச்சல் மூட்டக்கூடும் என்ற பயத்தில் அவர்களை அமைதிப்படுத்த இவர்கள் விரும்பியிருக்கலாம்.[31] இயேசுவை மேசியா என்று அறிவித்தது அவர்களுக்கு எரிச்சலாயிருந்தது என்பதே மிகவும் பொருத்தமாக உள்ளது. இயேசு, “இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்!” என்று பதிலுரைத்தார் (லூக். 19:40).

இரண்டாவது, தலைவர்கள் கவலையடைந்தனர். அவர்கள் இயேசுவைச் சிறுமைப்படுத்த, தங்களால் இயன்ற ஒவ்வொரு வழியிலும் முயற்சி செய்திருந்தனர், அவை யாவும் வீணாயிற்று. தாங்கள் “செய்கிறது வீண்” என்று அவர்கள் முடிவு செய்தனர் (யோவா. 12:19அ). “இதோ, உலகமே அவனுக்குப் பின் சென்று போயிற்றே” என்று அவர்கள் புலம்பினர் (யோவா. 12:19ஆ)! கவலைப்படக் காரணம் எதுவும் அவர்களிடத்தில் இல்லாதிருந்தது. கூட்டத்தினர் மனவுறுதியற்றவர்களாய் இருந்தனர். இந்தக் கும்பலானது விரைவில் கர்த்தருக்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பிக் காட்டக்கூடும் (அவ்வாறே செய்யும்).

ஊர்வலமானது ஒலிவ மலையின் தெற்குச்சரிவைச் சுற்றி வந்து, கெதரோன் ஆற்றின் பள்ளத்தாக்கில் (யோவா. 18:1ஐக் காணவும்) இறங்குவதற்குத் தயாராக இருந்தது (லூக். 19:37). கீழேயிருந்த எழில்மிகு காட்சியைக் கண்ட இயேசு, துக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டார் (லூக். 19:41). அவர் நகரத்திற்காக, “உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதே அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது” என்று கதறினார் (லூக். 19:42).[32] அவரை மேசியா என்று எருசலேம் ஏற்றுக்கொண்டிருந்தால், அது சமாதானத்தை அறிந்திருக்கும், ஆனால் தப்பெண்ணம் மக்களின் கண்களைப் பார்வையற்றுப்போகச் செய்திருந்தது (மத். 13:15). எருசலேம் நகரம் சமாதானத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்குப் பதிலாக, அழிவினால் துன்பப்படும்:

> உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும்[33] தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் (லூக். 19:43, 44).

துன்பகரமான அந்தத் தீர்க்கதரிசனம் நாற்பது ஆண்டுகளுக்குச் சற்று குறைவான காலத்திலேயே, ரோம இராணுவத்தினர் நகரத்தைச் சூழ்ந்துகொண்டபோது நிறைவேற்றமடைந்தது. கி.பி. 70ல், நகரம் 143 நாட்கள் அளவாக, தீத்துவின் கைப்பற்றுதலின்கீழ் கிடந்தது, ஆறு லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டார்கள் மற்றும் ஆயிரக்கணக்கானவர்கள் பிடிக்கப்பட்டனர். தேவன் எருசலேமுக்கு ஒரு விசேஷித்த “சந்திக்குங்

காலத்தை" கொடுத்திருந்தார்: அவர் அந்த நகரத்திற்குத் தமது குமாரனின் நபர்த்துவத்தில் வந்திருந்தார் (யோவா. 14:19), ஆனால் அது அவரை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. நிறைவாக, அது தனது தவறவிடப்பட்ட வாய்ப்பிற்காகப் பயங்கரமான விலையொன்றைச் செலுத்துவதாயிருக்கும்.

இயேசுவின் விரோதிகள் கவலைப்பட்டனர், அவரோ அழுதார்; ஆனால் கூட்டத்தினர் இன்னமும் ஒரு விடுமுறை நாள் மகிழ்விலேயே நிலைத்திருந்தனர். ஊர்வலமானது மலைச்சரிவிலிருந்து பள்ளத்தாக்கில் இறங்கி வந்து, கெதரோன் ஆற்றைக் கடந்து, பின்பு நகரத்தின் மாபெரும் வாயில்களுக்கு ஏறிற்று. அவர்கள் குறுகலான தெருக்களினூடே கடந்து செல்லுகையில், அங்கே குடியிருந்தவர்கள், "இவர் யார்?" என்று விசாரித்தார்கள் (மத். 21:10), மற்றும் அவர்களுக்கு, "இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு" என்று பதில்கூறப்பட்டது (மத். 21:11).

கூட்டத்தினர் தேவாலயத்திற்குள் சென்றபோது, உணர்வெழுச்சி அவர்களைப் பற்றிப் பிடித்திருக்க வேண்டும். நிச்சயமாகவே, இது கிறிஸ்து தமது ராஜ்யத்தை அமைப்பதற்கான வேளையாக இருக்க வேண்டும்! அதற்குப் பதிலாக, கர்த்தர், "எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து" பின்பு, "சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூடப் பெத்தானியாவுக்குப் போனார்" (மாற். 11:11). மக்கள் எவ்வளவாகத் திகைப்பும் குழப்பமும் அடைந்திருக்க வேண்டும்! அநேகமாக அவர்கள், "நாளைக்கு! ஒருவேளை நாளைக்கே அந்த நாளாயிருக்கும்!" என்று கூறியிருப்பார்கள்.

## புதுப்பித்தலுக்கான வாய்ப்பு
## *(மத். 21:12-17; மாற். 11:12அ, 15-19; லூக். 19:45-48)*

***வழங்கப்பட்ட வாய்ப்பு (மத். 21:12-15; மாற். 11:12, 15-17; லூக். 19:45-47)***

அடுத்த நாள் காலையில் இயேசு மீண்டும் பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்குப் பயணம் சென்றார் (மாற். 11:12அ), இந்த வேளையில் அமைதியான வகையில் பயணம் சென்றார். தேவாலயமே அவர் அடைவிடமாயிருந்தது. அவர் தமது வெளியரங்கமான ஊழியத்தின் தொடக்கத்தில் தேவாலயத்தைச் சுத்திகரித்திருந்தார் (யோவா. 2:13-17); இப்போது அவர் அதை மீண்டும் சுத்திகரிப்பார்.[34] யூத இனத்தவரின் ஆராதனையில் இருந்த மோசடியினால் தெளிவாக்கப்பட்டபடியாக, தேவனுடன் ஒரு சரியான உறவுமுறையை இழந்து நின்றதென்பது யூதநாட்டவரின் பிரச்சனைகளின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது.

> இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து: " 'என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும்'

*என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" என்றார் (மத். 21:12, 13).*

*பொதுமக்களுக்குத் திறந்திருந்த மண்டபமானது நகரின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லுவதற்குக் குறுக்குப் பாதையாகப் பயன்படுத்தப்பட்டது என்ற உண்மையானது பயபக்தியின்மைக்கு இன்னொரு குறிப்பாக இருந்தது. அதைக் கிறிஸ்து நிறுத்தினார். "ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும்[35] கொண்டு போக விடாமல்" (மாற். 11:16).*

*தேவாலயத்தைச் சுத்திகரித்திருந்த நிலையில், இயேசு "உபதேசிக்கத் தொடங்கினார்" (மாற். 11:17; லூக். 21:37ஐயும் காணவும்), மற்றும் "ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்ட[னர்]" (மாற். 11:18). பின்பு, "குருடரும், சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (மத். 21:14). இது ஒன்று மாத்திரமே தேவாலயத்தில் குணமாக்கியதற்கான பதிவாக உள்ளது.*

*முந்திய நாளில் கிறிஸ்து தமது ராஜ்யத்தை நிலைநாட்டத் தவறியிருந்ததில், அவர்மீது சிலர் மனக்குறைவு கொண்டிருந்து இருக்கலாம், ஆனால் பொதுவில் உணர்வெழுச்சியானது தொடர்ந்தது. தேவாலயத்திற்குத் தங்கள் பெற்றோர்களுடன் வந்திருந்த சிறுபிள்ளைகள்,[36] முந்திய நாளில் எருசலேமை நிறைத்திருந்த வார்த்தைகளை எதிரொலிக்கத் தொடங்கினர்: "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும் ..." (மத். 21:15ஆ).*

### *நிராகரிக்கப்பட்ட வாய்ப்பு (மத். 21:15-17; மாற். 11:18, 19; லூக். 19:47, 48)*

*"அவர் செய்த அதிசயங்களையும், ... ஆர்ப்பரிக்கிற சிறுபிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு" (மத். 21:15அ, ஆ) - ஆனால் அவர்களின் கடினப்பட்ட இருதயங்கள் தொடப்படாதவைகளாக நிலைத்திருந்தன. அவர்கள் "கோபமடைந்து அவரை நோக்கி: 'இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ?' என்றார்கள்" (மத். 21:15இ, 16அ). அதற்கு இயேசு, "ஆம், கேட்கிறேன். 'குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்' என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?" என்று பதிலுக்குக் கேட்டார் (மத். 21:16ஆ).[37]*

*"அவர் செய்திருந்த அதிசயங்கள்" யாவும், யூதத்துவ அதிகார வர்க்கத்தினருடைய இருதயங்களை உருகச் செய்வதற்குப் பதிலாக, இயேசுவை அழிப்பதற்கு அவர்களை அதிகம் தீர்மானமுள்ளவர்களாகச் செய்தது (மாற். 11:18; லூக். 19:47). இருப்பினும், அவரது பிரபலத் தன்மையினால் அவர்கள் மனமுடைந்து போனார்கள் (மாற். 11:18). "ஜனங்களெல்லாரும் அவருக்குச் செவி கொடுத்து அவரை அண்டிக் கொண்டிருந்தபடியால்" அந்த நாளின் பகலில் அவரைக் கைது செய்ய*

*அவர்கள் பயந்தனர் (லூக். 19:48); மற்றும் அவர் எங்கு தங்கியிருந்தார் என்பது அவர்களுக்குத் தெரியாதிருந்தபடியால், அவர்களால் அவரை இரவு வேளையில் கைது செய்யவும் இயலாதிருந்தது.*[38]

*இயேசு பகல் முழுவதிலும் தொடர்ந்து போதித்தார்.*[39] *பின்பு, மாலைப் பொழுது வந்தபோது, அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டு பெத்தானி யாவுக்கு வந்து சேர்ந்தார் (மத். 21:17; மாற். 11:19ஐக் காணவும்).*[40]

## கனிதருவதற்கான வாய்ப்பு
## *(மத். 21:18-22; மாற். 11:12-14, 20-26)*

*இந்த நாடகத்தின் இடையில், ஒரு புதிரான நிகழ்ச்சி நடைபெற்றது. நடந்த எல்லாவற்றிலின்றும் இது மாறுபட்ட பண்புடையதாக காணப்படுகிறது, அத்துடன் இது நாம் அறிந்துள்ள வகையில் இயேசுவின் நபர்த்துவம் மாறுபட்ட பண்புடையதாகும் என்பதைக் குறிப்பிட அவசியமில்லை. இந்த நிகழ்வை விளக்கவுரையாளர்கள் பொதுவாக, யூதர்களுக்கு ஒரு பொருளுறி பாடமாகக் கருதுகின்றனர்.*

### *வழங்கப்பட்ட வாய்ப்பு (மத். 21:18, 19; மாற். 11:12-14)*

*திங்கட்கிழமை காலையில், இயேசு எருசலேமுக்குப் பயணம் செய்து கொண்டிருக்கையில், "அவருக்குப் பசியுண்டாயிற்று" (மாற். 11:12; மத். 21:18). அவரும் அவரது சீஷர்களும் அநேகமாக, யூதர்கள் உணவு உண்ணும் நேரமான இடைக் காலைவேளையான, அந்த நாளின் முதல் உணவு வேளைக்கு முன்னதாகவே பெத்தானியாவை விட்டுப் புறப்பட்டு வந்திருக்கலாம்.*

*"அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார்" (மாற். 11:13அ).*[41] *அது ''அத்திப் பழக்காலமாயிரா[திருந்தது]'' என்று மாற்கு விளக்கப் படுத்தினார் (மாற். 11:13இ): பஸ்கா பண்டிகையானது மார்ச் மாதப் பின்பகுதி அல்லது ஏப்ரல் மாத முன்பகுதியில் நடைபெற்றது, அத்திப்பழம் பழுக்கும் பருவமானது மே மாதப்பின்பகுதி அல்லது ஜூன் மாதமுன்பகுதி வரையிலும் தொடங்கியிராது.*[42] *இருந்தபோதிலும், இந்த அத்திமரத்தில் இலைகள் மிகுந்திருந்த காரணத்தினால், இதில் பழங்கள் இருக்கும் என்று இயேசு நினைத்தார். சட்டப்படி, கனிக்கொத்துக்கள் இலைகளுக்கு முன்னதாகவே தோன்றும். இலைகளுடன் உள்ள ஒரு அத்திமரம் என்பது உண்மையில், அது தன்னிலே குறைந்தபட்சம் சிறிய உண்ணத்தக்க பச்சையான அத்திக்காய்களையாவது கொண்டிருக்கும் என்று விளம்பரப் படுத்துவதாக இருந்தது.*

*இதற்கு நேர்மாறாக, கிறிஸ்து அந்த மரத்திடம் வந்து சேர்ந்தபோது, "அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை" (மாற். 11:13ஆ). அவர், ''இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக் கடவன்!''*[43] *என்று கூறி அந்த மரத்திற்குத்*

*தண்டனை அளித்தார், அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள் (மாற். 11:14; மத். 21:19 மற்றும் மாற். 11:21ஐயும் காணவும்).*

### *நிராகரிக்கப்பட்ட வாய்ப்பு (மத். 21:20-22; மாற். 11:20-26)*

*அடுத்த நாள் காலையில் இயேசுவும் பன்னிருவரும் அதே வழியில் மீண்டும் பயணம் செய்தனர். அவர்கள் அந்த அத்திமரத்தினிடம் வந்த போது, "அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டார் கள்" (மாற். 11:20). இறக்கின்ற ஒரு மரமானது இறப்பதற்கு ஒரு சில வாரங்கள் அல்லது மாதங்களை எடுத்துக்கொள்ளும். முதலில், ஒரு சில இலைகள் பழுப்பு நிறமாகும், பின்பு சற்றுக்காலம் கழித்து, அதிகமான இலைகள் பழுப்பு நிறமாகும், கடைசியில் முழுமரமும் இறந்துபோகும். ஆனால் இந்த அத்திமரம் உடனே காய்ந்துபோயிற்று.*

*ஒரு அற்புதம் - நிச்சயமாயிருந்தபோதிலும், ஒரு வினோதமான அற்புதம் - நடைபெற்றிருந்தது என்பது தெளிவாயிருந்தது. சீஷர்கள் திகைத்து நின்றார்கள். பேதுரு, "ரபீ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப் போயிற்று" என்று கூறினார் (மாற். 11:21). இயேசு இந்த அற்புதத்தை ஏன் செய்தார் என்று எழுத்தாளர்கள் வியப்படைகின்றனர்; இதை அவர் எவ்வாறு செய்தார் என்று அறிவதற்குப் பன்னிருவரும் விரும்பினார்கள் (மத். 21:20).*

*இயேசு, விசுவாசத்தின் வல்லமையைப் பற்றி இதற்கு முன்பு அளித்திருந்த போதனை சிலவற்றை மீண்டும் கூறினார் (மாற். 11:22-24; மத். 21:21, 22; மத். 17:20ஐக் காணவும்). பின்பு அவர், மற்றவர்களை மன்னித்தல் பற்றிய புத்திமதியொன்றைக் கூடுதலாகக் கூறினார் (மாற். 11:25, 26). அவர் அந்த மரத்தைச் சபித்த நிகழ்ச்சியானது மனிதர்களைச் சபிப்பதற்கான உரிமையை அவரது சீஷர்களுக்குக் கொடுத்தது என்ற மனப்பதிவைத் தமது சீஷர்கள் பெற்றுக்கொள்வதை அவர் விரும்பாது இருக்கலாம்.*

*நாம் இவ்விஷயத்தை அங்கேயே விட்டுவிடக்கூடும், ஆனால் கிறிஸ்து நிகழ்த்திய வேறெந்த அற்புதத்தைப் போலவும் இது இருந்ததில்லை என்ற உண்மை அப்படியே நிலைத்துள்ளது. மற்ற யாவும் இரக்கத்தின் அற்புதங் களாக இருக்கையில், இது நியாயத்தீர்ப்பின் அற்புதமாக இருந்தது. சந்தர்ப்பப் பொருளில் காணுகையில், இதை "செயல்பாட்டில் உள்ள உவமை"[44] என்று கண்ணோக்காதிருப்பது கடினமானதாக உள்ளது. அத்திமரத்திற்கும் எருசலேமில் இயேசு போதிக்க முயற்சி செய்த மனிதர் களுக்கும் இடையில் இகழ்ச்சியான இணைவு ஒன்றுள்ளது. J. W. மெக்கார்வீ அவர்கள், "மற்ற அத்திமரங்களிலிருந்து பிரிக்கப்பட்ட நிலையில் இம்மர மானது எவ்வாறு தோற்றப்பொலிவு கொண்டிருந்தது என்பதையும், இதன் கனிதராத விளைவுகளும் யூதமக்களை எவ்வாறு பூரணமாகப் பிரதிபலித்தது என்பதையும் வாசகர்கள் கவனிக்கத் தவறுதல் என்பது மிகவும் கடினமாகும்" என்று எழுதினார்.[45] பஸ்கா பண்டிகைக்கான ஆயத்தவேலைகளின் பரபரப்புகளினால் கிறிஸ்து சூழப்பட்டிருந்தார். இது ஆழமான ஆவிக்குரிய தன்மையில் ஆதாரமாயிருக்க வேண்டும், ஆனால் இது (நமது வேத வசனப் பகுதியின் சொல்லாக்கத்தைப் பயன்படுத்துவதென்றால்) "இலைகளை*

*யல்லாமல் வேறொன்றும்" இல்லாத நிலையாக இருந்தது (மாற். 11:13).*

*[நமக்கென்று] தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தாமல் இருப்பதும் கடினமானதாக இருக்கிறது. இயேசுவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் நாம் ஒவ்வொருவரும் ''கனி தர'' வேண்டும் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது (மத். 7:19; மாற். 4:20; யோவா. 15:2, 8, 16; ரோமர் 7:4; கலா. 5:22, 23ஐக் காணவும்). இருப்பினும் கர்த்தர் நமது வாழ்வைக் காணுகையில், ''இலைகளையல்லாமல் வேறொன்றையும்'' காணாதிருக்கச் சாத்தியக்கூறுள்ளதா?*

## *முடிவுரை*

*இந்தப் பாடமானது, தவறவிடப்பட்ட வாய்ப்புக்களைப் பற்றியதாக உள்ளது. கிரேக்கர்கள், வாய்ப்பு என்பதை, வினோதமான சிகையலங்காரம் செய்த ஒரு பெண் என்பதாக உருவகித்தனர்: முன்னால் இது நீளமாகவும் பின்னால் இது குட்டையானதாகவும் உள்ளது. இவள் நம்மை நெருங்கி வரும்போது, இவளது முடியை நாம் பற்றிப் பிடித்துக்கொள்ள முடியும், ஆனால் இவள் நம்மை விட்டுப் போகும்போது அவ்வாறு செய்ய இயலாது என்று அவர்கள் சுட்டிக்காண்பிக்கின்றனர். புறக்கணிக்கப்பட்ட வாய்ப்புக்கள் என்றென்றைக்கும் கடந்து சென்றவையாகின்றன என்பதை இந்த உருவகம் விவரிக்கிறது. ஒவ்வொரு வாய்ப்பும் முக்கியமானதாக உள்ளது, ஆனால் பின்வரும் வாய்ப்புக்களை நம்மில் எவரும் தவறவிடாதிருக்கும்படி நான் ஜெபிக்கின்றேன்:[46]*

- *கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கான வாய்ப்பு.*
- *கர்த்தரைத் துதிப்பதற்கான வாய்ப்பு.*
- *ஆவிக்குரிய புதுப்பித்தலுக்கான வாய்ப்பு.*
- *தேவனுக்கென்று கனிதருவதற்கான வாய்ப்பு.*

*லூக்கா 21:37, 38 வசனப்பகுதி, இயேசுவின் சொந்த ஊழியத்தின் கடைசி வாரத்தில் அவரது நடவடிக்கைகளைப் பற்றிப் பின்வரும் தொகுப்புரையைத் தருகிறது: "அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம் பண்ணிக்கொண்டிருந்து, இராக்காலங்களில் வெளியே போய், ஒலிவ மலை என்னப்பட்ட மலையிலே தங்கி வந்தார். ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படி அதிகாலமே தேவாலயத்தில் அவரிடத்திற்கு வருவார்கள்." அடுத்த சில பாடங்களில் நாம், அந்த நாட்களில் ஒன்றைப் பற்றி விரிவாகப் படிப்போம்: செவ்வாய்க்கிழமை, ''கேள்விகளின் மாபெரும் நாள்."*

---

*குறிப்புகள்*

*[1]செய்தித் தொடர்புக்கு ஒரு உதவி என்ற வகையில், இயேசுவின் கடைசி*

*நாட்கள் பற்றிய பாடங்களில் நான், யூதர்களின் முதல் நாள், இரண்டாம் நாள், மற்றும் பிற நாட்கள் (இவைகள் சூரியன் மறைவின்போது தொடங்கி, மறுநாள் சூரியன் மறைவின்போது முடிபவைகளாயிருந்தன) பற்றிக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, நாட்களுக்கான இன்றைய பெயர்களைப் பயன்படுத்துவேன் (இவை நள்ளிரவில் தொடங்கி நள்ளிரவில் முடிகின்றவையாக உள்ளன).* [2]Richard Rogers, *The Life of Christ and His Teaching* (Lubbock, Tex.: Sunset International Bible Institute External Studies Department, 1995), 59. [3]*ஹெஸ்டர் அவர்கள் இதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: "இயேசுவின் ஊழியத்தைப் பற்றி நேரடியாக எடுத்துரைக்கும் அத்தியாயங்களில் ஏறக்குறைய நாற்பது சதவிகிதம் இந்த முடிவு நாட்களில் அவரது அனுபவங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன"* (H. I. Hester, *The Heart of the New Testament* [Liberty, Mo.: Quality Press, 1963], 187). [4][*எருசலேம் நகரமானது*] *தனது கர்த்தரை ஏற்றுக்கொண்டிருந்தால் என்னவாகியிருந்திருக்கும்? நாம் இதற்குப் பதில் அளிக்க இயலாது. புறக்கணித்தல் என்பதே இறுதியானதாக இருந்தது என்பதை மாத்திரமே நாம் அறிகின்றோம் (*B. S. *டீன் அவர்களின் "வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு" என்ற புத்தகத்தில் காணவும்).* [5]"Paschal" *என்பது "பஸ்காவுக்காக அல்லது பஸ்கா சம்பந்தப்பட்ட" என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தையானது "பஸ்கா" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது, இது "பஸ்கா" என்பதற்கான எபிரெய வார்த்தையின் அடிப்படையில் அமைந்ததாக உள்ளது.* [6]*உலகப்பிரகாரமான ஆதாரமூலங்களின்படி, மூன்று பிரதான பண்டிகை நாட்களின்போது நகரத்தின் மக்கள் தொகை பல இலட்சங்களாக அதிகரிக்கும் - அந்த மூன்று பண்டிகைகளில் பஸ்கா என்பது மிகவும் பிரபலமானதாகும்.* [7]*உலகில் நான் வாழும் பகுதியில், ''அவர்கள் அவரைக் கைது செய்யப் பிடி ஆணையொன்றைப் பிறப்பித்தனர்'' என்றோ அல்லது "அவர்கள் அவரது தலைக்கு விலையை நியமித்தார்கள்'' என்றோ கூடக் கூறமுடியும். உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய சொல்விளக்கம் ஒன்றைப் பயன்படுத்துங்கள்.* [8]*நான் வாழும் இடத்தில், நாங்கள் ''அவர்கள் 'தேடப்படுகிறார்' என்று சுவரொட்டியொன்றை வைத்தார்கள்'' என்று கூறுவோம்.* [9]*''மரணம் சமீபித்திருக்கும்போது" என்ற முன்புள்ள பாடத்தின் முடிவுரையைக் காணவும்.* [10]*மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் தங்கள் சுவிசேஷ விவரங்களில், எரிகோவி லிருந்து இயேசு பயணம் செய்ததைக் கூறிய பின்பு உடனடியாக எருசலேமுக்குள் அவரது வெற்றிப் பிரவேசம் பற்றிய விவரத்திற்குச் சென்று விட்டனர் (மத். 20:29; 21:1; மாற். 10:46; 11:1; லூக். 19:28, 29). மத்தேயுவும் மாற்குவும் தங்கள் சுவிசேஷ விவரங்களில் பிற்பாடுதான் பெத்தானியாவில் விருந்தைப் பற்றிப் பதிவு செய்தனர் (மத். 26:6-13; மாற். 14:3-9). இருப்பினும், யோவான் மாத்திரமே இந்த இரவு விருந்து பற்றிய நாள் வரிசைக்கான குறிப்புகளைத் தருகின்ற ஒரே எழுத்தாளராக இருக்கின்றார். இவர், பஸ்காவுக்கு ஆறுநாட்களுக்கு முன்னதாக இயேசு பெத்தானியாவுக்கு வந்ததாகக் கூறுகின்றார் (யோவா. 12:1) மற்றும் இவர் பிற்பாடு பெத்தானியாவில் விருந்து நடைபெற்றதற்கு "அடுத்த நாளிலே" வெற்றிப் பிரவேசம் நடைபெற்றதாக கூறினார் (12:12). பெத்தானியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களுக்கு நாம் யோவானின் நாள்வரிசை முறையைப் பின்பற்றுவோம்.*

[11]*இந்தப் புத்தகத்தில் உள்ள "இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்'' என்ற வரைபடத்தைக் காணவும்.* [12]*பஸ்கா உணவு, யூதர்களின் பரிசுத்த நாட்காட்டியில் முதலாம் மாதத்தின் பதினான்காம் நாள் மாலையில் உண்ணப்பட்டது. குறிப்பிட்ட அந்த ஆண்டில், அந்தத் தேதியானது வெள்ளிக்கிழமையன்று வந்தது என்பது உறுதி, அது ஓய்வுநாளுக்கு முந்திய நாளாயிருந்தது (யோவா. 19:31ஐக் காணவும்). இயேசு ஓய்வுநாளான்று பயணம்*

செய்திருக்க மாட்டார் என்பதைக் கருதும்போது, அவர் பஸ்கா உணவு உண்ணும் நாளுக்கு ஒரு வாரம் முன்னதாக, ஓய்வுநாளுக்குச் சற்றே முன்பு [பெத்தானியாவுக்கு] வந்து சேர்ந்திருப்பார் என்பது உறுதி. [13]"அவர்கள்" என்றால் யார் என்பது பற்றி வேத வசனப்பகுதி தெளிவற்றதாக உள்ளது. இந்த விருந்து மார்த்தாளின் வீட்டில் அல்ல, ஆனால் சீமோன் என்பவரின் வீட்டில் நடைபெற்றது என்பதால், "அவர்கள்" என்பது அநேகமாக மார்த்தாள் மற்றும் மரியாள் ஆகியோருடன் இன்னும் அதிகமானவர்களை உள்ளடக்கி யிருக்கலாம். கர்த்தருக்கு ஒரு விசேஷித்த உணவைக் கொடுக்க கிராமத்தார் ஒத்துழைத்திருக்கக்கூடும். இருப்பினும், நடைமுறை மார்த்தாள், "பணிவிடை" செய்தாள் (யோவா. 12:2), எனவே அந்த உணவிற்கு முக்கியப் பங்கினை அவள் அளித்திருப்பாள் என்பது உறுதி. [14]பல்வேறு விளக்கவுரையாளர்களின் கூற்றுக்களின்படி, சீமோன் என்பவர் மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு ஆகியோரின் தந்தையாயிருக்கலாம். [15]இதை லூக்கா 7:36-50ல் நடைபெற்ற அபிஷேகத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. சில விவரங்கள் ஒன்றுபோல் உள்ளன; ஆனால், இடம், காலம், சந்தர்ப்பம், பங்கேற்றவர்கள் மற்றும் விளைவு ஆகியவை மாறுபட்டிருந்தன. [16]இந்த விமர்சனம் யூதாஸினால் தொடங்கப்பட்டது என்பது தெளிவு (யோவா. 12:4, 5), இவன் ஒருவேளை கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலைக் கூர்ந்து உணர்ந்தான். மத்தேயு, மாற்கு ஆகியோரின் விவரங்களில், பெத்தானியாவில் இரவு விருந்து பற்றிய வரலாற்றைத் தொடர்ந்து யூதாஸ் காட்டிக்கொடுக்க முடிவெடுத்தல் பற்றிய வரலாறு வருகிறது. ஒருவேளை இவர்கள் யூதாஸின் சூழ்ச்சியை விளக்கப்படுத்துவதற்காக இரவு விருந்து பற்றிய இவ்வரலாற்றை இவ்வாறு அமைத்திருக்கலாம். [17]இந்த நிகழ்ச்சி பற்றிய அதிக விவரமான கலந்துரையாடலை, இந்தப் புத்தகத்தில் பின்னுல் வரும் பிரசங்கத்தில் காணவும். [18]நாம் அறிந்த வரையிலும், இந்தத் திட்டத்தை ஆலோசனைச் சங்கத்தார் ஏற்று நடத்தவில்லை. இயேசுவைச் சிலுவையில் அறைதல் என்பது அவர்களின் இரத்த தாகத்திற்கு நிறைவளிப்பதாயிருந்தது என்பது உறுதி. [19]இது வாரத்தின் முதல் நாளில் நடைபெற்றது. இது யூதர்களுக்கு, ஓய்வுக்குப் பின்பு பணிகளைத் தொடங்கும் வேலை வாரத்தின் ஆரம்ப நாளாக இருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நகரத்தில் நடவடிக்கைகள் பரபரப்பாக இருந்திருக்கும். [20]பெத்பகே இருந்த இடம் பற்றிக் கல்வியாளர்கள் நிச்சயமான கருத்து எதையும் கூறவில்லை; ஆனால் சுவிசேஷ விவரங்களின்படி, இது ஒலிவ மலைச் சரிவில் பெத்தானியா ஊரின் அருகாமையில் இருந்தது.

[21]இந்த விலங்குகளுக்கான ஏற்பாடு முன்னதாகவே செய்யப்பட்டிருந்ததா அல்லது இந்த விலங்குகளின் உரிமையாளர் (ஒருவேளை கர்த்தரின் சீஷராயிருக்க லாம்), ''ஆண்டவருக்கு வேண்டும்'' என்று கேள்விப்பட்டபோது சாதகமாக பதில்செயல் செய்வார் என்று இயேசு அறிந்திருந்தாரா என்பது பற்றி நமக்கு எதுவும் கூறப்படவில்லை. மத்தேயு இரண்டு விலங்குகளைப் பற்றிக் கூறுகையில், மற்றவர் கள் இயேசு பயணம் செய்த ஒரே ஒரு விலங்கைப் பற்றி மட்டுமே கூறுகின்றனர். [22]ஒருவேளை, கழுதைக்குட்டியின்மீது இன்னும் யாரும் பயணித்திருந்ததில்லை என்பதால் இயேசு அதைத் தேர்ந்தெடுத்து இருக்கலாம் (மாற். 11:2). ஒரு விலங்கை வேலைக்குப் பயன்படுத்துதல் என்பது அதைப் பரிசுத்தமான பயன்பாட்டிற்குத் தகுதியற்றதாக்கிற்று என்று பல எழுத்தாளர்கள் நினைக்கின்றனர் (எண். 19:2; உபா. 21:3; 1 சாமு. 6:7ஐக் காணவும்). வேலைக்கமர்த்தப்பட்டிராத கழுதைக்குட்டியின் தாய்க் கழுதையானது, இளம் விலங்கினை வருடிக்கொடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கலாம். [23]சாலொமோனின் அரச அபிஷேகத்தின்போது அவர் பயணிப்பதற்கென்று தாவீது ஒரு கோவேறுக் கழுதையை அனுப்பியிருந்தார் (1 இரா. 1:33). கோவேறுக் கழுதை என்பது குதிரை மற்றும் கழுதை ஆகியவற்றின்

இணைவினால் பெறப்படக் கூடிய ஒரு உயர்வகை விலங்கு ஆகும். [24]இந்த நிகழ்ச்சியினால் நிறைவேற்றப்பட்ட அடிப்படைத் தீர்க்கதரிசனம் சகரியா 9:9 ஆகும், ஆனால் வார்த்தையமைப்பானது ஏசாயா 62:11ல் இருந்து வருபவற்றையும் உள்ளடக்குகிறது, இது எருசலேமுக்கு கவிதைத்துவ நடையில் வழக்கப்பட்ட சொற்றொடரான "சீயோன்" என்பதாகும். [25]பல்வேறு சமூகங்களில், கனத்திற்குப் பாத்திரராகக் கருதப்பட்டவர்களுக்கு மதிப்பைக் காண்பிப்பதற்குத் தரைவிரிப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் வகையில், சிலவேளைகளில் மணப்பெண் ஒரு திருமண வைபவத்திற்கு வரும் வழியில் மலர்கள் தூவப்படுகின்றன. மேலும் பிரமுகர்களுக்கு ''சிவப்புக்கம்பளம் விரித்து'' வரவேற்பு அளிக்கப்படுவதையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம். [26]"ஓசன்னா" என்பது "'இரட்சியும்!' என்று அர்த்தப்படுகிற எபிரெயச் சொல்விளக்கமாகும்" (Orville E. Daniel, *A Harmony of the Four Gospels*, 2d ed. [Grand Rapids, Mich.: Baker Books, 1996], 150). [27]சிறப்பாக, வசனம் 25 மற்றும் 26ஐக் கவனியுங்கள். சங்கீதம் 118 மேசியாத்துவ சங்கீதம் என்று கருதப்படுகிறது. சிறப்பாக வசனம் 22 மற்றும் 23ஐக் கவனியுங்கள், இவை புதிய ஏற்பாட்டில் அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படுகின்றன (எடுத்துக்காட்டாக, மத். 21:42; அப். 4:11). [28]ஹல்லெல் (Hallel) என்பது "துதி" என்று அர்த்தப்படும் ஒரு எபிரெயச் சொல்லாகும். [29]யூதர்களின் சிந்தையில், குருத்தோலைகள் என்பது வெற்றியையும் அகமகிழ்ச்சியையும் அடையாளப்படுத்தின. [30]லூக்கா 19:39 வசனம், பரிசேயர்களே முறையிட்டவர்களும் கவலை கொண்டவர்களுமாய் இருந்தனர் என்று குறிப்பிடுகிறது.

[31]கலகம் எழும் என்ற பயத்தினால் பண்டிகை நாட்களின்போது எருசலேமில் இருந்த ரோமப் போர்ச்சேவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகப்படுத்தப்பட்டது. வெற்றிப் பிரவேசத்தை ரோமர்கள் கவனிக்கவில்லை என்பது உறுதி என்ற உண்மையானது, அதை அவர்கள் அரசியல் மிகைக் கூற்றெதுவுமற்ற அமைதியான பேரணியாகக் கண்டனர் என்று கருத்துத் தெரிவிக்கிறது. [32]இவ்விடத்தில் எருசலேமுக்காக இயேசு அழுததை லூக்கா 13:34, 35உடன் ஒப்பிடவும் (மத். 23:37-39ஐயும் காணவும்). [33]இந்த வசனப்பகுதியில், "உன் பிள்ளைகள்" என்பது எருசலேமின் குடிகளைக் குறிக்கிறது. [34]மத்தேயுவும் லூக்காவும், வெற்றிப் பிரவேசம் பற்றிய தங்கள் விவரங்களை தேவாலயத்தைச் சுத்திகரித்தல் பற்றிய தங்கள் விவரங்களுடன் இணைக்கின்றனர், ஆனால் மாற்கு, சுத்திகரித்தல் நிகழ்ச்சியானது உண்மையில் அடுத்த நாளிலே நடைபெற்றது என்று தெளிவாக்கினார் (மாற். 11:1, 11, 12, 15). விஷயம் இதுவாக இருந்ததென்றால், இயேசு ஞாயிற்றுக்கிழமையன்று தேவாலயத்தைச் சுத்திகரிக்காதிருந்தது ஏன்? ஞாயிற்றுக்கிழமையன்று மிகவும் தாமதமாக இயேசு தேவாலயத்திற்கு வந்து சேர்ந்தபடியால் (மாற். 11:11), தேவாலயத்தில் இருந்த வர்த்தகர்கள் ஏற்கனவே அந்த நாளின் வர்த்தகத்தை முடித்து, வீடு திரும்பியிருந்தனர் என்று சிலர் நினைக்கின்றனர். மற்றவர்கள், இயேசு ஞாயிற்றுக்கிழமையன்று சூழ்நிலையை ஆய்வு செய்தார், பின்பு திங்கட்கிழமையன்று தேவையானவற்றைச் செய்வதற்குத் திரும்பி வந்தார் என்று நினைக்கின்றனர். "நாம் இதை அறிவதில்லை" என்பதே இந்தக் கேள்விக்குப் பதிலாக உள்ளது. [35]"பண்டம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது பாத்திரங்கள், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் இவை போன்றவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொதுவான சொல்லாகும். [36]இயேசு பன்னிரெண்டு வயதில் மரியாளுடனும் யோசேப்புடனும் தேவாலயத்திற்கு வந்தது போலவே (லூக். 2:41-51), இந்தப் பிள்ளைகள், தங்கள் பெற்றோர்களுடன் வந்திருந்தனர். [37]இந்த மேற்கோளானது செப்துவஜிந்த்தில் சங்கீதம் 8:2ல் இருந்து

வருகிறது. [38]இவர்களது இக்கட்டான நிலையை யூதாஸ் விரைவிலேயே தீர்த்து வைப்பான். [39]சில ஒப்பீடுகள் இவ்விடத்தில், இயேசுவைக் கிரேக்கர்கள் தேடியதை (மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட போதனையை; யோவா. 12:20-50) இவ்விடத்தில் வைக்கின்றன, மற்றும் அது திங்கட்கிழமையன்று நடந்திருக்கலாம். மற்றவர்கள், இது செவ்வாய்க்கிழமை என்ற வேலைமும்முரமான நாளன்று நடைபெற்றது என்பதே பொருத்தமானது என்று நினைக்கின்றனர், நான் எனது வரைக்குறிப்பில் அவ்வாறே வைத்திருக்கின்றேன். [40]இந்த வாரத்தின் இரவு வேளைகளில் இயேசு தங்கியிருந்த இடத்தை மாற்றிக் கொண்டிருந்தார் என்பது உறுதி (லூக். 21:37ஐக் காணவும்). ஒருவேளை, அவர் ஏதாவது ஒரு இரவில் எங்கு தங்கியிருந்தார் என்பதை ஆலோசனைச் சங்கத்தார் கண்டறியக் கடினமாயிருப்பதற்காக இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம்.

[41]இந்த மரத்தில் கனி இல்லை என்பதை இயேசு அறிந்திருக்கவில்லை என்ற உண்மையானது, கிறிஸ்து இந்தப் பூமிக்கு வருவதற்குத் தனது தனிச் சிறப்புரிமைகள் சிலவற்றை விட்டுக் கொடுத்தமைக்கான இன்னொரு விவரிப்பாக உள்ளது (பிலி. 2:6, 7) - இந்த விஷயத்தில் இவர் தமது எல்லாம் அறிந்த தன்மையை விட்டுக் கொடுத்திருந்தார் (மத். 24:36ஐயும் காணவும்). [42]மத்தேயு 24:32ஐக் காணவும். மே மாதப் பிற்பகுதி அல்லது ஜூன் மாத முற்பகுதி என்பது சாதாரணமாக முதல் பயிர் அறுவடைக்குத் தயாரான காலமாயிருந்தது; சிலவேளைகளில் ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் பின் அறுவடை ஒன்று இருந்ததுண்டு. [43]அத்திமரத்து நிகழ்ச்சிகளை திங்கள் காலை மற்றும் செவ்வாய் காலை நடந்ததாக மத்தேயு ஒன்றாக இணைவித்தார்; இவ்விதமாக அவர் "உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று" (மத். 21:19) என்று எழுதினார். அந்த மரம் உடனே காயத் தொடங்கிற்று என்பதில் ஐயமில்லை, இருப்பினும் அதை சீஷர்கள் அடுத்த நாள் வரையிலும் காணாதிருந்தனர். [44]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 250. [45]மெக்கார்வீ அவர்கள் பின்வரும் முன்னெச்சரிக்கையான வார்த்தைகளைக் கூடுதலாகக் கூறினார்: "ஆனால் நாம், இந்த உவமைக்கு இவ்வகையான பயன்பாட்டைத் தைரியமாக ஏற்படுத்தக்கூடாது, ஏனெனில் இயேசுவே கூட, நாம் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தாம் நோக்கங் கொண்டிருந்ததாகக் குறிப்பெதுவும் தராதிருந்தார்" (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 581-82). [46]நீங்கள் உங்கள் எடுத்துரைப்பை முடிக்கையில் திறவுகோல் கருத்துக்களை மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.